## IN THE COURT OF SUBORDINATE JUDGE, SANKARI

**MCOP.No.139/2016 C/W MCOP.No.153/2016 Date:11.08.2022**

பெயர்-வெங்கடேசன் (**PW**1)

2 ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை : (சத்தியபிரமாணத்தின் பேரில்)

நான் கோயம்புத்தூரில் இருந்து என் சொந்த வேலையாக வெள்ளரிவெள்ளி வந்தேன் என்றால் சரிதான். நான் சொந்த வேலையை முடித்து விட்டு கோயம்புத்தூருக்கு சென்ற போது தான் விபத்து ஏற்பட்டது என்று சொன்னால் சரிதான். நான் கொடுத்த புகாரிலும் நான் தாக்கல் செய்த முதல் தகவல் அறிக்கையிலும் நான் ஓட்டிச் சென்ற TN 66 P 6842 என்ற BAJAJ PULSAR வண்டி என்று சொன்னால் சரிதான். ஆனால் அந்த வாகனம் என்னுடையது அல்ல சபரி என்பவரது என்றால் சரிதான். அந்த இருசக்கர வாகனத்தை விபத்து சமயத்தில் நான் தான் ஓட்டிச்சென்றேன் என்றாலும் என் மீது தவறு இல்லை என்றால் சரிதான். என் மீது தவறு இல்லை என்பதால் நான் ஓட்டிச் சென்ற வாகனத்தின் காப்பீட்டுதாரரான 1 மற்றும் 2 எதிர்மனுதாரர் எனக்கு நஷ்டஈடு கொடுக்க கடமைப்பட்டவர் அல்ல என்றால் சரிதான். எனக்கு ஏற்பட்ட காயங்கள் எனக்கு குணமாகி விட்டது என்றால் சரிதான். எனக்கு எந்த ஊனமும் ஏற்படவில்லை என்றால் எனக்கு இடது கையில் எலும்பு முறிவு ஏற்பட்டு பிலேட், ஸ்ரூ போடப்பட்டுள்ள படியால் எந்த வித பொருட்களும் தூக்கமுடியாமையால் என்னால் வேலைக்கு செல்ல முடியவில்லை. நான் வழக்கிற்காக மருத்து செலவுகளை செய்யாமல் நான் மிகைப்படுத்தி கூறியுள்ளேன் என்றால் சரியல்ல. நான் தற்போது வேலைக்கு சென்று வருகிறேன் என்றால் சரியல்ல. 1, 2 எதிர்மனுதாரரிடம் நான் நஷ்டஈடு கோரமுடியாது என்றால் சரியல்ல.

4 ம் எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை

குள்ளம்பட்டி-தேவூர் சாலை வடக்கு-தெற்கு நோக்கி செல்கிறது என்றால் சரிதான். வெள்ளுத்து பெருமாள் கோவில் பிரிவு சாலை கிழக்கிலிருந்து மேற்காக செல்கிறது என்றால் சரிதான். இந்த சம்பவ விபத்து கிழக்கிலிருந்து மேற்காக வந்து குள்ளம்பட்டி பிரியும் சாலையில் நடந்தது என்றால் சரிதான். கீழே விழுந்தவுடன் வண்டி இழுத்துச் சென்றது. வழக்கு சம்பவ இடத்தை காட்டக்கூடிய மாதிரி வரைபடத்தை வாங்கி தாக்கல் செய்ய தயாராக இருக்கிறேன் என்றால் சரியல்ல. வெள்ளுத்து பெருமாள் கோவில் பிரிவு சாலை இருந்து 200 அடி துரத்தில் நானாகவே தீடிரென்று பிரேக் போட்டு சருக்கி விழுந்து விட்டேன் என்றால் சரியல்ல. 3ம் எதிர்மனுதாரருக்கு TN 27 U 2532 என்ற வாகனம் இந்த சம்பவ விபத்தில் இடம் பெறவில்லை என்றால் சரியல்ல. நான் ஓட்டிச் சென்ற வாகனத்திற்கு முன்புறத்தில் முகப்பு விளக்கு மற்றும் இரு பக்க கால் வைக்கும் பகுதி ஆகியவைகள் சேதாரம் ஏற்பட்டது என்றால் சரிதான். மற்றோரு வாகனத்திற்கு என்ன சேதாரம் எற்பட்டது என்பதை காண்பிக்க அந்த வாகனத்தின் மோட்டார் வாகன ஆய்வறிக்கை தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். மேற்படி வாகனம் விபத்தில் சம்பந்தப்படாத அந்த வாகனத்தின் ஆய்வறிக்கை தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. இந்த

விபத்து சம்பந்தமான வழக்கு பிழையுடைய வழக்கு என்று முடிக்கபட்டது என்று எனக்கு எப்போது தெரியும் என்றால் நீதிமன்றத்திலிருந்து வந்த போது தான் தெரியும், 02.03.2016 தேதி காவல் உதவியாளர் சிவதாஸ் என்னை விபத்து சம்பந்தமாக விசாரிக்க வந்த போது தான் எனக்கு தெரியும் என்றால் சரிதான். மற்ற சாட்சிகளை காவல் நிலையத்திலேயே விசாரித்து கொண்டதாக எதன் அடிப்படையில் கூறுகிறேன் என்றால், என்னை அதன்பின்னிட்டு விசாரிக்க வராததால் ஊகித்துக்கொண்டேன். நீதிமன்றத்தில் இருந்து வழக்கு முடிக்கப்பட்டதாக எனக்கு அறிவிப்பு வந்தது. மேற்படி குற்ற இறுதியறிக்கையில் சங்ககிரி குற்றவியல் நீதிதுறை நடுவர் எண் 1க்கு அனுப்பி வைத்த விபரம் எனக்கு தெரியவந்தது. மேற்படி வழக்கில் நான் நீதிமன்றத்தில் ஆஜராகி மேற்படி இறுதியறிக்கை பொய்யானவை என்றும் அதை நிராகரிக்க வேண்டும் என்றும் 3ம் மனுதாரர் மீது குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்ய வேண்டும் என்று கூறி ஆட்சேபித்த ஆவணத்தை இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். ஆட்சேபணை செய்ததது இன்னும் நிலுவையில் உள்ளதற்கான ஆவணம் எதுவும் தாக்கல் செய்யவில்லை. நான் 21.04.2014ம் தேதி நஷ்ட ஈடு கோரி மனுதாக்கல் செய்தேன் என்றால் சரிதான். அந்த மனுவில் நான் ஆட்சிபித்தது குறித்து எதுவும் கூறவில்லை என்றால் சரிதான். இந்த விபத்தில் 3ம் எதிர்மனுதார் வாகனம் ஈடுபடாததால் 4ம் எதிர்மனுதாரருக்கு எதிரான வழக்கு தள்ளுபடி செய்யதக்கதல்ல என்று சொன்னால் சரியல்ல. எனது கையில் பிளேட், ஸ்குரூ பொருத்தப்பட்டுள்ள நுண்கதிர் படம் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். விபத்தினால் எனக்கு நிரந்தர ஊனமோ வருமான இழப்போ ஏற்படவில்லை என்றால் சரியல்ல. நான் கால்நடை மருத்துவரிடம் உதவியாளராக இருந்ததற்கான ஆவணங்களை தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான், நான் கோரியுள்ள தொகை அதிகம் என்று சொன்னால் சரியல்ல.

Sd/-வெங்கடேசன்

Sd/-எஸ். உமா மகேஸ்வரி,
சார்பு நீதிபதி, சங்ககிரி.